# இந்த ஊழியப்பாதை எப்படி திறந்தது?
# (How Did This Ministry unfold to us?)

## From Latha

நான் (Latha) சிறுவயதாக இருக்கும்போதே இயேசு என்னை தேடி வந்து தன் பிள்ளையாக ஏற்றுக்கொண்டார். நானும் அவரை ஏற்றுக் கொண்டேன். உலகத்தில் எத்தனையோ விதமான தெய்வங்கள் இருக்கின்றன. ஆனாலும் எனக்கு ஏன் இயேசு பிடித்தது என்றால், ஒரு தெய்வம் மனிதனாக இந்த பூமிக்கு வந்து ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என வாழ்ந்து காட்டிவிட்டு போன தெய்வம் என்பதால்தான். !!!!.....

இயேசு ஒரு மனிதன் எப்படி அன்பாக இருக்க வேண்டும், அடுத்தவர்களின் தவறை ஏன் மன்னிக்க வேண்டும், எப்படி தனக்குத் தானே வியாதிகளையும் சுகமாக்கி, அடுத்தவர்களின் வியாதியையும் சுகப்படுத்த முடியும் என்றும், மரித்தவர்களை எப்படி மீண்டும் உயிர்ப்பிக்க முடியும் என்றும், எப்படி அற்புதங்களை செய்ய முடியும் என்றும் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டினார். பிடிச்ச வசனம்.



நாம் வாழும் உலகில் எத்தனையோ மதகுருமார்கள், தெய்வங்கள், ஞானிகள் வாழ்ந்துவிட்டு போனார்கள். ஒரு சிலர் அந்தந்த சமூகத்தில் சில முன்னேற்ற மாற்றங்களை சொல்லிவிட்டு போனார்கள்.

## மதமல்ல மார்க்கம்.

இயேசு 12 சீஷர்களை வைத்து ஒரு மதமல்ல, மன மார்க்கத்தை, ஒரு இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார். அது 2000 வருடங்கள் தாண்டி இன்றைய உலகத் தொகையில் 800 கோடி மக்களில் சுமார் 3 ல் 1 பங்கு ஆகி இருக்கிறது என்றால் இது வாழும் முறை அல்லவா? இதுவே வாழும் முறை.

## Role model

இயேசுவிடம் எனக்கு பிடித்தது.... முன்மாதிரியாக வாழ்ந்து காட்டியது. ரோல்மாடல் Role model என்று சொல்வோம் அல்லவா? எதையும் யோசிக்காமல் கண்ணை மூடிக்கொண்டு அவரை Follow பண்ணலாம்.

அந்த தெய்வத்தை 18 வயதிலேயே பிடித்துக் கொண்டேன். அதன் பிறகு ரோல்மாடல் மகள், ரோல்மாடல் மருமகள், ரோல்மாடல் மனைவி, ரோல்மாடல் அம்மா என்று முதலில் என்னைப் பழக்கிக் கொண்டேன்.

அதன் பிறகு, என் சுய வாழ்வு வெற்றியும், இயேசுவுக்குள் எனக்கு இருந்த ஐக்கியமும், எனக்குள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. அது என் ஊழிய அழைப்பாக மாறியது.

இப்படிக்கு,
லதா.

## From Jeyapal



நானும் (Jeyapal) சிவகாசி அருகிலுள்ள ஒரு கிராமத்தில் ஒரு இந்துக் குடும்பத்தில்தான் பிறந்தேன். எங்கள் ஊரில் இருக்கும் அம்மன் கோவிலுக்கு வழக்கமாக குடும்பத்துடன் செல்வது வழக்கம்.

எனக்குத் திருமணம் ஆன போதே என் மனைவிக்கு Christianity மீது ஆர்வம் உண்டு என்று தெரியும். ஆனால் அதன் ஆழம் தெரியாது. உறவினர்கள் “எல்லாம் திருமணம் ஆனால் சரியாகி விடுவாள்” என்று சொன்னார்கள்.

திருமணம் 1988 ல் நடந்தது. எனது மனைவியின் இடைவிடாத ஜெபத்தினால், என்னை இரட்சிக்க, இயேசு தானே 3 முறை என் கண் முன்னே வந்து காட்சி அளித்தார். நான் 2010 ல் இரட்சிக்கப் பட்டேன்.

என் மனைவி சொன்னதாக பலரும் எனக்காக ஜெபித்தார்கள் என்று பின்னர்தான் தெரிந்து கொண்டேன். ஜெபத்தின் வலிமை அவ்வளவு பெரியது. ஆண்டவரையே கூட நேரில் வர வைக்கும் அளவு அதற்கு வல்லமை உண்டு. ஆனால், அதற்கு முக்கியமான 3 விஷயங்கள் இருக்கிறது.

1. மத்தேயு 7:7 “கேளுங்கள், கொடுக்கப்படும்” என்று சொல்கிறது. எனவே, நம் அப்பாவிடம் கேட்பது போல, உரிமையுடன் கேட்க வேண்டும்.

2. மாற்கு 11:24 சொல்வது போல,ஜெபிக்கும்போதே பெற்றுக் கொள்வோம் என்ற விசுவாசத்துடன் ஜெபிக்க வேண்டும்.

3. பெற்றுக் கொள்ளும் வரை ஜெபிக்க வேண்டும்.

எங்கள் வகுப்பில் எப்படி விசுவாசத்துடன் ஜெபிக்கணும் என்று விவரமாக கற்றுக் கொள்ளலாம்.

- Jeyapal

## ஏன் கடவுளைத் திணிக்க வேண்டும்?

எல்லோரும் தேவனைப் பற்றி பிரசங்கம் பண்ணுவது போல் அல்ல. ஏதோ ஒரு வித்தியாசமான முறையில் தேவனை மக்களுக்குள் திணிக்க வேண்டும் என்பதுதான் அந்த அழைப்பு.

அநேகர்
1. பாவ வாழ்வு
2. பிரச்சனை நிறைந்த வாழ்வு,
3. சோகமான வாழ்வு,
4. வியாதி,
5. வறுமை,
6. கோபம்,

இவைகளில் சிக்கி ஒரு மோசமான வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதிலிருந்து இவர்களைக் காப்பாற்ற நான் ஏதோ ஒன்று செய்ய வேண்டும், இந்த சமூகத்திற்கு ஏதோ ஒன்று செய்ய வேண்டும் என்ற தவிப்பு....

அது ஒரு கிறிஸ்தவன்(ள்) எப்படி தேவன் ஏற்படுத்திக் கொடுத்த ஒரு சிறப்பான வாழ்வை வாழ்ந்து தனக்கும், தேவனுக்கும் மகிழ்ச்சி உண்டாக்க முடியும் என்றும், கிறிஸ்தவம் எப்படி நமக்குள் மணக்கும் என்றும் வாழும் முறையை பயிற்சி வகுப்பாக (Training classes) எடுக்க வேண்டும் என தீர்மானித்தோம். உள்ளுக்குள்ளே ஒரு வெறி! ஒரு வேட்டை!

என் தேடுதல் அதிகமாக அதிகமாக, என் முன் வாய்ப்புகளும் வந்தன. நிறைய படித்தோம். பலவிதமான உள்நாட்டு, வெளிநாட்டு பாஸ்டர்களிடமும், (Pastors) பயிற்சியாளர்களிடமும் (Trainers) பயிற்சி எடுத்தோம். கிட்டத்தட்ட 20 க்கும் அதிகமான Life skills Certification courses கற்றுக் கொண்டு இருக்கிறோம். தேவ வழிநடத்துதல், உபவாசம், வேதம் எல்லாம் சேர்ந்து இந்த பயிற்சி வகுப்பை நானும், என் கணவரும், சேர்ந்து பல சபைகளிலே எடுக்க முடிவு செய்தோம். கர்த்தர் நடத்தினார்.



இயேசுவைப் பற்றி அறிந்துகொள்ள ஏற்கனவே பலவிதமான சபைகள் இருக்கும்போது நீங்கள் என்ன ஸ்பெஷலாக சொல்லி தருவீர்கள்? என்று கேட்கலாம்.

ஒருவன் இயேசுவை முழுமையாக அறிந்தால், (Holistic wellness approach- we teach about body, mind, spirit) வாழ்வில் வெற்றி, சந்தோஷம், சமாதானம், செல்வ செழிப்பு, இவைகளோடு தானும் வாழ்ந்து இயேசுவுக்கு சாட்சியாகவும் வாழ முடியும். இயேசுவை புரிந்து கொள்ளாததால், கிறிஸ்தவன் என்று சொல்லிக்கொண்டாலும் வாழ்விலே வறுமை, வியாதி, தோல்வி இவைகளை சந்தித்துக்கொண்டு இருந்தால் ஒருவர் சாட்சியாக எப்படி ஜீவிக்க முடியும்? இல்லை! இவரைப் பார்த்து மற்றவர்கள் தேவனை தேடி வருவார்களா?

## TRAINING MINISTRY

நல்ல விஷயங்களைப் பிரசங்கம் பண்ணிவிடலாம். சொல்லிக் கொடுக்கலாம். ஆனால் செய்ய வைக்க போதிய நேரம் சபைகளில் இல்லை. உதாரணம்: அன்பாக இருக்க வேண்டும் என்று சபைகளில் சொல்லிக் கொடுத்தால், நாங்கள் கணவன் மனைவியோடு எப்படியெல்லாம் அன்பாக பேசுவது, இருப்பது, குழந்தைகளை எப்படி நடத்துவது, நடந்து கொள்வது என்றெல்லாம் விவரமாக சொல்லிகொடுப்போம். நாங்கள் செய்வது ட்ரெயினிங் மினிஸ்ட்ரி (Training Ministry).



Teach… பண்ணுவது டீச்சர் வேலை. அதை கற்றுக் கொண்ட ஒரு மாணவன் படிக்கலாம், படிக்காமல் போகலாம். வாழ்க்கையில் கற்றுக்கொண்டதை அப்பியாசப் படுத்தாமல் போகலாம். ஆனால் கற்றுக்கொண்டது வாழ்க்கையில் எப்படி அனுபவம் ஆக்குவது? என்பதுதான் Training. This is the difference between teaching and training.

## CHRIST LANGUAGE




ஒரு புது மாதிரியான கிறிஸ்தவ மொழியை (Christ language) கற்றுத் தருகிறோம். ஒரு வெற்றிகரமான கிறிஸ்தவன், எப்படி பிராக்டிகல் லைஃப்ல (Practical life) வாழனும் அப்டின்னு சொல்லிக் கொடுப்போம். யாருக்கும் இப்படி செய்யனும் அப்படி வாழனும் என்று அட்வைஸ் கொடுக்க மாட்டோம். ஒருவருடைய பிரச்சனைகளுக்கு அவர்களுக்கு உள்ளிருந்தே பதிலை, வெளிக்கொண்டு வர உதவுவோம்.

இங்கு Practical Life Teaching... அனுபவ வழிமுறையாக, Experiential Way of Teaching. கற்றுக் கொள்ளும்படிக்கு பயிற்சி கொடுப்போம்.

இதுவரை பல கிறிஸ்தவ சபைகளிலும், இளம் வாலிபர்களுக்கும், முதுமை அடைந்த பெரியவர்களுக்கும், படிக்கும் மாணவர்களுக்கும், கைவிடப்பட்ட பெண்களுக்கும், கணவன் மனைவிமார்களுக்கும், பெற்றோர்களுக்கும்... சுமார் 6000 பேர்களுக்கும் அதிகமாக பயிற்சி கொடுத்துள்ளோம்.

இங்கு மனவளக்கலையோடு, ஒரு புது கிறிஸ்தவ மொழி வேதத்திலிருந்து எப்படி வந்தது என்பதை வேதவசன ஆதாரங்களோடு கற்றுக் கொடுக்கப்படும்.

Body, mind, spirit, ஆவி, ஆத்துமா, சரீரம் 3 க்கும் சம அளவு முக்கியம் கொடுத்து, ஏன் சம அளவு? பெரும்பான்மையான சபைகளில் ஆவிக்கு மட்டுமே முழு இடம், அதாவது, ஆத்துமா, சரீரம் கேட்பாரற்று கிடக்கும். ஆத்துமா, சரீரம் எப்படி, தேவன் படைத்திருக்கிறார், அதால என்ன செய்ய முடியும்? அதுக்கு என்ன முக்கியத்துவம்? அதை எப்படி நடத்தனும்? அது என்ன செய்தி சொல்ல வருது? அது கொண்டு வரும் செய்திகளை மதிக்கிறீர்களா? Complete ஆ நிராகரிக்கிறீர்களா? இதையெல்லாம், ஆராய்ந்து, அனுபவித்து.... அதில் கண்டுபிடித்த நன்மையானவைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

நீங்கள் உறவு சம்பந்தப்பட்ட எந்த மாதிரியான கேள்விகளோடு வந்தாலும் பதிலோடு போவீர்கள் !!....

**ஏனெனில், வகுப்பு நடத்துவது நாங்கள் அல்ல. பரிசுத்த ஆவியானவர் தாம்.**

## உரையாடல் எவ்வளவு முக்கியம் (communication)

நான் ஒரு சமயம் ஒரு மீட்டிங் போயிருந்த போது ஒரு குழந்தையை பார்த்தேன். குழந்தையைக் கூட்டிக் கொண்டு ஒரு பெண்மணியும் உடன் வந்தார்கள். நானும் அந்த குழந்தையிடம் கூட வந்தது யார் உன் பாட்டியா? என்று கேட்டேன். அதை குழந்தை "இல்லை! அது என் அம்மா." என்றதும் எனக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது. அந்த அம்மாவுக்கு முகம் செத்து விட்டது." அதனால் என்ன பேச வேண்டும்? "உன்னோடு வந்திருப்பது இது யார்?" என்று சிம்பிளாக கேட்டுவிட்டால் வருத்தம் யாருக்கும் இல்லை. தர்மசங்கடமான சூழ்நிலையும் இல்லை.

இந்த உதாரணத்தில், அது அம்மாவா பாட்டியா என்று நீங்களே ஒரு முடிவு பண்ணி கேள்வி கேட்பதை விட்டுவிட்டு சிம்பிளாக," இது யார்?" எனும் கேள்வி ஒரு அனுபவத்தை சுகமாக்கி விடுகிறது.

அன்றாடம் வாழ்க்கையில் கூட சில தவறுகள் நமக்கு முன்பாக நேர்ந்திருக்கலாம். நாமும் இவள் தான் செய்திருப்பாள். இவள் இந்த மாதிரி தானே என்று மக்களை முடிவு செய்யாமல், சிம்பிளாக," இதை யார் செய்தது?" என்று கேட்பது பல பிரச்சனைகளை தவிர்க்கும் அல்லவா?

இந்த மாதிரி தவறுகள் வாழ்வில் யார் தான் செய்ய மாட்டார்கள். ஆனால் அடுத்த முறை தவறு நேராமல் இருக்க, இந்த மொழியை கற்றுக்கொள்ளும் போது திருத்திக் கொள்ளலாம்.

நாம் கூட வாழ்க்கையில் நான் இதற்கு லாயக்கற்றவன், என்னால் இது முடியவே முடியாது என்றெல்லாம் கூட தவறாக பேசிவிடுவோம். அப்போது நம்மை நாமே ஏன் இதுவரை நீ முடியாது என்று நினைத்ததை எதுவுமே செய்வதில்லையா? அப்படி கேட்டு ஆழ்ந்து யோசித்து பார்த்தால் இல்லையே நான் இதை இதை சாதித்து இருக்கிறேனே?! என்று ஏதாவது விடை கிடைக்கும்.



## நீங்கள் கோழியா? கழுகா?

நான் ஒரு கதை சொல்கிறேன். ஒரு அரண்மனையில் ஒரு கழுகு வந்து இரண்டு முட்டைகளை போட்டுவிட்டு சென்றது. அரசருக்கும் இரக்கம் அதிகமானதால் அதை கோழி முட்டைகளுடன் சேர்த்து, கோழிகளை விட்டு அடவு காத்து வளர்த்தார். இரண்டு முட்டைகளும் வளர்ந்து கழுகானது. கோழி தன் குஞ்சுகளை வளர்த்ததால், கோழி குஞ்சுகளைப்



போலவே இந்த இரண்டு கழுகுகளும் நடக்கும். ஆனால் பறக்காது. கற்றுக்கொடுக்க அரசர் ஒரு பயிற்சியாளரை ஏற்படுத்தினார். அதில் கடுமையான பயிற்சிக்கு பிறகு ஒரு கழுகு பறந்து போய் வானத்திலே கலந்தது. அரசருக்கு மிகுந்த சந்தோஷம். ஆனாலும் இன்னொரு கழுகு பறக்காமல் தன் இனத்தோடு சேராமல் தனிமையாக இருப்பது குறித்து மிகுந்த கவலை கொண்டார். அவர் அந்த பயிற்சியாளரிடம்.'' நாட்டுக்குள்ளே போ .... மிகுந்த திறமைசாலிகள் எத்தனை பேர் இருக்கிறார்கள் அவர்களை கொண்டு வா...''

எப்படியாவது இந்த கழுகுக்கு பறக்க கடும் பயிற்சி கொடுங்கள்.

சரி என்று சென்ற பயிற்சியாளர். ஒரு பெரிய திறமைசாலியை கொண்டு வந்தார். கழுகு ஒரே நாளில் பறந்து சென்றது. மிகுந்த ஆச்சரியத்துடன் அவரைப் பார்க்க ஆசைப்பட்டார். நேரில் சென்று பார்த்தால் அது ஒரு சாதாரண விவசாயி. ஆச்சரியத்தில் எப்படி என்று கேட்டார். அதற்கு அந்த பாமரன் பதிலாக,'' ஒன்றுமில்லை அரசே! தினமும் அது சொகுசாக உட்கார்ந்து இருக்கும் மரக்கிளையை பட்டென்று வெட்டினேன். அது பறந்து போய்விட்டது."

இந்தக் கதையைப் போல நாம் கூட ஏதோ ஒரு மரக்கிளையை பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருப்போம். நாமெல்லாம் இந்த கழுகைப் போல வானளவு பறக்க படைக்கப்பட்டவர்கள். தேவனின் துணை கொண்டு, அந்த கிளை என்னவென்று கண்டுபிடித்தால், ஈசியாக வெட்டி விடலாம். நாங்கள் பயிற்சிகளை வைத்திருப்போம். அது நேரில் வரும் போது கற்றுக் கொள்ளலாம்.

நீங்கள் பறக்க நாங்கள் உதவி செய்கிறோம்.

**எந்த மாதிரி சப்போர்ட்? (resource)**

1. நாங்கள் நடத்தும் ஒவ்வொரு பாடங்களுக்கும் நோட்ஸ் எழுதிக் கொள்ளலாம்.
2. புத்தக வடிவிலும் வெளியிட்டிருக்கிறோம். வாங்கிக் கொள்ளலாம்.
3. மன அழுத்தம் உள்ளவர்களுக்கு தேவையானால் ஆலோசனை வழங்குவோம்.
4. Level 1, Level 2, Level 3 முடிப்பவர்களுக்கு தேவையானால் சர்டிபிகேட் வழங்கப்படும் (For Paid Courses Only).

**பயிற்சி எங்கள் கையில்...**

**நீங்கள் விரும்பினால் மாற்றம் உங்கள் கையில்....!!!.....**